# நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை – 2009

## திராவிட முன்னேற்றக் கழகம்

அறிவியல் தொழில்நுட்பப் புரட்சியில் பல அரிய சாதனைகளை ஒருங்கிணைத்து 21ஆம் நூற்றாண்டில் உலகம் தனது வளர்ச்சிப் பயணத்தை மேற்கொள்ளும் நேரத்தில், இந்தியத் திருநாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு மாபெரும் வலிமைமிக்க சமூக, பொருளாதார, சீர்திருத்த அரசியல் இயக்கமாக, தமிழினத்தின் ஒப்பற்றத் தலைவர் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் தலைமையில் அனைத்து மக்களின் நல்வாழ்விற்குப் பல அரிய திட்டங்களையும், சட்டங்களையும் பணிகளையும் நிறைவேற்றி சாதனை படைத்து வருகிறது.

1917ல் உருவாக்கப்பட்டு, 1920 முதல் 1937 வரை ஆட்சி பீடத்தில் இருந்த நீதிக்கட்சியின் தாக்கத்தாலும்; அதன் முன்னோடிகளான டாக்டர் நடேசனார், சர்.பிட்டி.தியாகராயர், டாக்டர் டி.எம்.நாயர் ஆகியோரது தன்னலம் மறுத்த தொண்டறத்தாலும்—தமிழர்கள் தம் நிலையுணரத் தலைப்பட்டனர்; இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் முதன்முதலில் சமூகநீதிப் பயணம் தொடங்கியது.

1944ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தின் காரணமாக, தந்தை பெரியார் அவர்கள் தலைமையில் திராவிடர் கழகம் தோற்றுவிக்கப்பட்டு; தன்மானம் காக்கவும், சமூக இழிவுகளையும், சமுதாய ஏற்றத்தாழ்வுகளையும் போக்கவுமான சமூகப் புரட்சி ஆரம்பமானது.

1949ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் – சமத்துவம், சமூகநீதி, சமதர்மம் ஆகிய முழக்கங்களுடன், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு போற்றிடவும், தமிழர்களின் தனித்தன்மைமிக்க மொழி, இனப் பெருமைகளை மீட்டிடவும், அவர்தம் உரிமைகளையும், நலன்களையும் காத்திடவும் – திராவிட முன்னேற்றக் கழகம், மாநில மக்களின் வீட்டுக்கு விளக்காக, நாட்டுக்குத் தொண்டனாக; ஒரு புதிய பாதை

காட்டும் அரசியல் இயக்கமாக முகிழ்த்து எழுந்தது. கடந்த 60 ஆண்டுகளாக இந்த மாபெரும் இயக்கம் பல மேடுபள்ளங்களைத் தாண்டி, சூறாவளி போன்ற சோதனைகளைச் சந்தித்து, வெற்றி தோல்விகளை சமமெனப் பாவித்து, தன்னைத்தானே புடம் போட்டுக் கொண்டு புகழ் ஒளியில் பொற்கோயிலாக உயர்ந்து நிற்கிறது. தமிழினத்தின் ஒப்பற்ற தலைவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அயராத களப்பணிகளாலும், ஆற்றல் மிகுந்த தலைமையாலும், ஒய்வறியா உழைப்பினாலும் திராவிட முன்னேற்றக் கழகம் மாபெரும் மக்கள் இயக்கமாக – சமூக, பொருளாதார, சீர்திருத்த அரசியல் இயக்கமாக வலிவும், பொலிவும் கொண்டு தமிழகத்தில் வெற்றி நடைபோட்டு வருகின்றது.

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டு விழாவும், திராவிட முன்னேற்றக் கழகம் பிறந்த 60 ஆண்டுகள் நிறைவு விழாவும் சங்கமமாகிற இக்காலக்கட்டத்தில்–இயக்கத்திற்காகத் தம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் தியாகம் புரிந்த தீரர்களின் திருவடிகளுக்கு – கலைஞர் அவர்களின் சீரிய தலைமையில் இயங்கி வரும் திராவிட முன்னேற்றக் கழகம் தனது வீரவணக்கத்தைச் செலுத்தி, இந்தியத் திருநாட்டின் பதினைந்தாவது நாடாளுமன்றத்திற்கான தேர்தல் (2009) அறிக்கையை அளிப்பதில் பெருமிதம் கொள்கிறது.

‘‘நல்லரசு அமைய, அமைத்திட நல்ல சமுதாயமும், சமுதாய அமைப்பும் தேவைப்படுகிறது’’ என்றார் பேரறிஞர் அண்ணா.

‘‘இன்றைய நிலையில் கலைஞர் அவர்களே ஆட்சிப்பொறுப்பில் இல்லாது, வேறு யார் இருந்தாலும்கூட இவ்வளவு திறமையாக எதிர்ப்புகளைச் சமாளித்துக் கொண்டு, காரியம் ஆற்றிவர முடியாது. இப்படிப்பட்ட முதல்வரை நாம் பெற்றிருப்பது ஒரு நல்ல வாய்ப்பு என்று மக்கள் உணரவேண்டும். இவ்வளவு அரியபெரிய காரியங்களையெல்லாம் நமது நலன் கருதிச் செய்கின்ற ஆட்சியினை ஆதரிக்க வேண்டும்’’ என்று தந்தை பெரியார் அவர்களாலும்;

"தம்பி கருணநிதியினுடைய ஆற்றல் பற்றியும், ஆற்றல் காரணமாகப் பெற்ற வெற்றிகள் பற்றியும், வெற்றிகள் எல்லாம் நாட்டு முன்னேற்றத்திற்குப் பயன்பட்டன என்பது பற்றியும், அந்த ஆற்றலும் வெற்றியும், நாட்டுக்கு என்றும் நல்லமுறையில் பயன்படும் என்பது பற்றியும் யாருக்கும் ஐயப்பாடு இல்லை" என்று பேரறிஞர் அண்ணா அவர்களாலும்;

போற்றிப் பாராட்டப்பட்ட தலைவர் கலைஞர் அவர்கள் – ஒவ்வொரு தேர்தலையொட்டியும் நல்ல அரசியலை உருவாக்கிட, மக்களாட்சி மாண்புகள் மிளிர்ந்து சமுதாயம் உயர்ந்திட, கூட்டணி பற்றியும், மக்கள் நல்வாழ்வுச் செயல்திட்டம் பற்றியும் சிந்தித்து முடிவுகளை மேற்கொள்பவர் என்பதைச் சரித்திரம் சாற்றும்.

கலைஞர் அவர்கள் இதுவரை தேர்வு செய்து ஆதரித்த தேசிய முன்னணி ஆனாலும்; ஐக்கிய முன்னணி ஆனாலும்; தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆனாலும்; ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆனாலும் தமிழ் மொழிக்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் பெருமையும், வளமும் சேர்த்துள்ளன.

தேசிய முன்னணி ஆட்சியிலே தான், சமூகநீதிக் காவலர் திரு. வி.பி. சிங் அவர்களால் மண்டல் பரிந்துரை ஏற்கப்பட்டு, மத்திய அரசின் வேலைவாய்ப்புகளில் 27 சதவீத இட ஒதுக்கீடு கிடைத்தது; காவிரி நதிநீர் பிரச்சனைக்கு நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது; மாநிலங்களிடை மன்றமும் அப்போதுதான் உருவானது. சென்னை விமான நிலையத்தில் பன்னாட்டு முனையத்திற்கு பெருந்தலைவர் காமராசர் அவர்களின் திருப்பெயரும் சூட்டப்பட்டன.

ஐக்கிய முன்னணி ஆட்சியில் திராவிட இயக்கச் சிந்தனையாளர் – கலைஞர் அவர்களின் மனசாட்சியாகத் திகழ்ந்த மறைந்த முரசொலி மாறன், மத்திய அரசின் தொழில்துறை அமைச்சராகப் பொறுப்பேற்று, சிறந்த ஒன்பது பொதுத்துறை நிறுவனங்களை "நவரத்தினங்கள்" என்று பெயரிட்டு இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு ஊக்கமளித்தார்.

தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியில் திராவிட முன்னேற்றக் கழகம் இடம் பெற்ற காரணத்தினாலேதான், மதச்சார்பற்ற அரசு அமைக்கப்பட்டு – மத நல்லிணக்கக் கொள்கை நிலை பெற்று – இந்தியப் பொருளாதாரம் வளர்ச்சிப் பாதையில் செல்வதற்கு வழிவகுக்கப்பட்டது.

“இந்தியாவின் மருமகளே வருக! இந்தியாவின் திருமகளே வெல்க!” என்று 2004ஆம் ஆண்டு பதினான்காவது நாடாளுமன்றத் தேர்தலில் தலைவர் கலைஞர் அவர்கள் தந்த தனிமுழக்கம் எட்டுத்திக்கும் எதிரொலித்து; மத நல்லிணக்கம் பேணவும், மதச்சார்பின்மை நிலைபெறவும், திருமதி சோனியா காந்தி அவர்களின் வழிகாட்டுதலோடு ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி அமைந்தது. ஐக்கிய முற்போக்குக் கூட்டணி தமிழகத்திலும், புதுவையிலும் 40 இடங்களிலும் வெற்றி பெற்று நானிலம் போற்றிடும் நல்ல சாதனையை நிகழ்த்தியது.

திராவிட முன்னேற்றக் கழகம் அங்கம் வகிக்கும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு கடந்த ஐந்தாண்டு காலத்தில் தமிழகத்திற்கு ஆற்றியிருக்கும் சாதனைகள் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

- தமிழ், செம்மொழி என்ற பிரகடனம்; சென்னையில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்.
- கப்பல் மற்றும் நெடுஞ்சாலைத் துறை மூலம் 56 ஆயிரத்து 664 கோடியே 21 இலட்சம் ரூபாய் செலவில் – 4 ஆயிரத்து 676 கிலோ மீட்டர் நீள தேசிய நெடுஞ்சாலைகளில் 3 ஆயிரத்து 276 கிலோ மீட்டர் சாலைகள் 4 வழிச்சாலைகளாக மேம்பாடு, மிகப்பிராம்மாண்டமான போக்குவரத்து மேமம்பாலங்கள், துறைமுக விரிவாக்கப் பணிகள், சரக்குப் பெட்டக முனையங்கள், நீர்வழிப் போக்குவரத்து வசதிகள்.

- சென்னைக்கருகில் ஒரகடத்தில் 470 கோடி ரூபாய் முதலீட்டில் மத்திய அரசின் தேசிய மோட்டார் வாகனச் சோதனை மற்றும் ஆராய்ச்சி உள்ளிட்ட வளர்ச்சிக் கட்டமைப்பு மையம்.
- 1553 கோடி ரூபாய்ச் செலவில் சேலம் உருட்டாலை சர்வதேச அளவுக்கு உயர்த்தப்பட்டு, புதிய குளிர் உருட்டாலை உருவாக்கம்.
- தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதியளிப்புச் சட்டத்தின் கீழ் 100 நாட்களுக்கு வேலை வாய்ப்பு உறுதி.
- தாம்பரத்தில் தேசிய சித்த மருத்துவ ஆய்வு மையம்.
- சேலத்தில் புதிய இரயில்வே மண்டலம்.
- 120 கோடி ரூபாய்ச் செலவில் சேலம் அரசினர் மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி ‘‘சூப்பர் ஸ்பெஷாலிட்டி’’ மருத்துவக் கல்லூரியாக மேம்பாடு.
- 1650 கோடி ரூபாய்ச் செலவில் சென்னை துறைமுகம்–மதுரவாயல் இடையே பறக்கும் சாலை.
- 2427 கோடி ரூபாய்ச் செலவில் சேதுசமுத்திரத் திட்டம்.
- நெசவாளர் சமுதாயத்தினர் பெரும்பயன் எய்திட சென்வாட் வரி நீக்கம்.
- 908 கோடி ரூபாய்ச் செலவில் நெம்மேலியில் கடல்நீரைக் குடிநீராக்கும் மற்றொரு திட்டம்.
- ‘‘பொடா சட்டம்’’ ரத்து.
- இந்தியாவிலேயே  முதல் முறையாக வளர்ந்த நாடுகளுக்கு இணையான மூன்றாம் தலைமுறை தகவல் தொழில் நுட்பத் திட்டம் (3.ஜி);

- அனைத்து கிராமங்களிலும் முழு கணினி நிர்வாகத்தை ஏற்படுத்தும் வகையில் தேசிய கணினி நிர்வாகத் திட்டம் அறிமுகம்; (National E.Governance Programme).
- 50 காசு செலவில் இந்தியா முழுவதும் தொலைபேசியில் பேசும் வசதி.
- மாதம் ஒன்றுக்கு 120 இலட்சம் புதிய தொலைபேசி இணைப்புகள்.
- செல்போன் கட்டணங்கள் குறைப்பு.
- தமிழகத்திலுள்ள மீட்டர் கேஜ்இரயில் பாதைகள் அனைத்தும் அகல இரயில் பாதைகளாக மாற்றிட அனுமதி.
- 1828 கோடி ரூபாய்ச் செலவில் 90 இரயில்வே மேம்பாலங்கள் கட்டுவதற்கு அனுமதி.
- சென்னை மாநகரில் மெட்ரோ இரயில் திட்டம்.
- ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- மத்திய அரசு கல்வி நிறுவனங்களில் 27 சதவீத இடஒதுக்கீடு.
- திருச்சி, கோவை, மதுரை விமான நிலையங்கள் விரிவாக்கம்.
- சென்னைக்கருகில் பன்னாட்டுத் தரம் வாய்ந்த கடல்சார் தேசிய பல்கலைக் கழகம்,
- திருவாரூரில் மத்தியப் பல்கலைக் கழகம்,
- கோவையில் உலகத் தரத்திலான மத்தியப் பல்கலைக் கழகம்,
- திருச்சியில் இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம்

- ஆசியாவிலேயே முதலாவதாக சென்னைக்கு அருகில் ஒன்றுக்கு மேற்பட்ட உடல் ஊனமுற்றோர்க் கான தேசிய நிறுவனம்.
- சென்னையில் மத்திய அதிரடிப்படை மையம் (என்.எஸ்.ஜி.)
- இந்தியா முழுவதும் விவசாயிகள் கூட்டுறவு அமைப்புகளில், வங்கியில் பெற்றிருந்த ரூ.72,000 கோடி மதிப்பிலான கடனும் வட்டியும் மத்திய அரசால் தள்ளுபடி செய்யப்பட்டது.
- இந்தியா முழுவதும் மாணவர்களுக்கு பல நூறு கோடி ரூபாய் கல்விக் கடன் அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் வழியாக வழங்கப்பட்டு வருகிறது.

மத்திய அரசில் இடம் பெற்ற தமிழகத்தின் 13 அமைச்சர்களும் பல்வேறு செயல் திட்டங்களை இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்காகவும், தமிழ்நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்காகவும் நிறைவேற்றி உள்ளனர். இந்திய அளவில் கடந்த காலங்களில் பெறமுடியாத அளவிற்குத் திட்டங்களின் மொத்த செலவுத்தொகையான ரூ. 3,70,000 கோடியில், தமிழ்நாடு 11 விழுக்காட்டுப் பங்கினைப் பெற்றுள்ளது. இதுவரை தமிழ்நாடு பெறாத அளவில் அதிக நிதியினைப் பெற்று தமிழ்நாட்டில் 69 மத்திய அரசுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

2004ஆம் ஆண்டில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை (Right to Information Act) நிறைவேற்றி, மக்களின் உரிமையையும், ஜனநாயக மாண்பையும் உயர்த்தியுள்ளது. இவ்வாறாக, பல சாதனைத் திட்டங்கள் கடந்த ஐந்தாண்டுகளில் தி.மு.கழகத்தின் துணையோடு மத்திய அரசால் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

தி.மு.கழக ஆட்சிக் காலங்களில் மாநிலத்தில் நிறைவேற்றப்பட்ட முன்னோடியான சமூகப் பொருளாதாரத் திட்டங்கள், இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களுக்கும் வழிகாட்டும் வகையில் அமைந்து வருகின்றன. மாநிலங்கள் அதிக அதிகாரங்களைப்

பெற்று மக்களுக்குச் சிறப்பான வகையில் பணியாற்றுவதற்கு மாநில சுயாட்சிக் கொள்கையை தி.மு. கழகம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. 1989ஆம் ஆண்டிற்குப் பிறகு இந்திய அரசியலில் தேசிய கட்சிகள் தனியாக மத்திய அரசில் ஆட்சியமைக்கும் பெரும்பான்மை பலத்தை நாடாளுமன்றத்தில் பெற முடியாமல் மாநிலக் கட்சிகளின் துணையோடு கூட்டணி ஆட்சி நிலை பெறத் தொடங்கியது. கலைஞர் அவர்களின் ஒப்பற்ற தலைமையின் கீழ் தி.மு.கழகம், மத்திய அரசில் அமைந்த கூட்டணி ஆட்சிகளில் இடம் பெற்று இந்தியாவில் மக்களாட்சி உறுதி பெறுவதற்கும், நிலையான அரசு அமைவதற்கும் தனது ஆக்கப்பூர்வமான ஆதரவினைத் தொடர்ந்து அளித்து வருகிறது.

## கூட்டாட்சி முறை (Federalism)

இந்திய கூட்டாட்சி முறையில் 1990ஆம் ஆண்டிற்குப் பிறகு, பல முற்போக்கான மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. மாநிலக் கட்சிகளின் ஆதரவுடன் மத்திய அரசில் தேசிய கட்சிகளின் கூட்டணி ஆட்சி இணக்கமான முறையில் அமைவதற்கான அரசியல் சூழல் வளரத் தொடங்கியுள்ளது. மாநிலக் கட்சிகளின் ஆதரவோடு அமைந்து வருகிற கூட்டணி ஆட்சிக் காலத்தில்தான் இந்தியப் பொருளாதாரத்தின் வளர்ச்சி உயரளவாக 7 விழுக்காட்டிலிருந்து 9 விழுக்காடு அளவிற்கு நிலைபெற்றுள்ளது. பல வல்லுநர்கள் சுட்டிக்காட்டுவது போல மத்திய அரசில், கூட்டணி ஆட்சி வழியாக அரசியல் கூட்டாட்சி கொள்கை (Political Federalism) வெற்றி பெற்று வருகிறது. இந்த அரசியல் கூட்டாட்சிக் கொள்கை, அரசமைப்புச் சட்ட கூட்டாட்சியாக (Constitutional Federalism) மலருவதற்கான காலம் கனிந்துள்ளது.

இவ்வகையான அரசியல் மாற்றத்தை 1969ஆம் ஆண்டிலேயே கலைஞர் அவர்கள் தொலைநோக்குப் பார்வையோடு மத்திய–மாநில உறவுகளை ஆய்வதற்கு இந்தியாவிலேயே முதன்முதலாக நீதிபதி இராஜமன்னார் தலைமையில் ஒரு குழு அமைத்தார். இக்குழுவின் பரிந்துரைகளின்படி 1974ஆம் ஆண்டிலேயே தமிழகச்

சட்டமன்றத்தில் 'மாநில சுயாட்சி' தீர்மானத்தை தி.மு.கழகம் சார்பில் முதல்வர் கலைஞர் அவர்கள் முன்மொழிந்தார்.

இதன் தொடர்ச்சியாக, மத்திய–மாநில உறவுகளை ஆய்வு செய்வதற்காக மத்திய அரசால் அமைக்கப்பட்ட நீதிபதி சர்க்காரியா குழுவும் (1983), நீதிபதி வெங்கடாசலய்யா குழுவும் (2000) மத்திய–மாநில உறவுகளை மாற்றியமைக்க வேண்டுமென்று பல பரிந்துரைகளை வழங்கியுள்ளன. மீண்டும் 2008இல் மத்திய–மாநில உறவுகளை ஆய்வதற்கு நீதிபதி பூஞ்சி குழு அமைக்கப்பட்டுள்ளது.

தி.மு.கழகம் மேற்கூறிய எல்லா குழுக்களுக்கும் தனது கருத்துகளை எடுத்துரைத்து, முழுமையானதும் உண்மையானதுமான கூட்டாட்சி முறையை மாநில சுயாட்சி அடிப்படையில் அமைத்திட வேண்டும் என்பதை (Wholesome and genuine federalism with fuller autonomy for the States) வலியுறுத்தியுள்ளது. மாநிலத்தில் சுயாட்சியும், மத்தியில் கூட்டாட்சியும் ஆக்கப்பூர்வமாக உருவாகி கூட்டாட்சி அமைப்பு வலுப்பெற இந்திய அரசமைப்புச் சட்டத்தில் தேவையான திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்று தி.மு.கழகம் வலியுறுத்துகிறது.

### மதச்சார்பின்மை (Secularism)

அரசின் மதச்சார்பற்ற தன்மைதான் இந்தியாவில் வாழும் அனைத்துத் தரப்பினரையும் இணைத்து வைத்திருக்கும் உறுதியான பிணைப்பாகும். இதனடிப்படையில் இந்திய அரசமைப்புச் சட்ட முகப்புரையில் கூறப்பட்டுள்ள மதச்சார்பின்மை நெறியை மீறாத வகையில் இந்திய அரசமைப்புச் சட்டம் 25 மற்றும் 26 ஆகிய பிரிவுகள் வழங்கியுள்ள உரிமைகளின்படி எந்த மதத்தையும் மனசாட்சிக்கு ஏற்ப கடைப்பிடிப்பதற்கும், சுதந்திரமாகப் பரப்புவதற்கும் பொதுநலனுக்கு ஒப்ப வளர்ப்பதற்கும் எவருக்கும் உரிமை உண்டு என்பதில் கழகம் இன்று போல் என்றும் உறுதியாக இருக்கும்.

மேற்கூறிய நெறிகளுக்கு எதிர்மறையாக பொது சிவில் சட்டம் அமைவதாலும், அரசமைப்புச்சட்டம் வழங்கியுள்ள மத, மனித உரிமைகளைப் பறிப்பதாலும் இச்சட்டத்தை எந்த வடிவிலும் நிறைவேற்றக் கூடாது என்பதை தி.மு.கழகம் தொடர்ந்து வலியுறுத்தும்.

## சமூகநீதி (Social Justice)

சாதிய ஏற்றத்தாழ்வுகளை நீக்க, சமூக நிலையிலும் மற்றும் கல்வியிலும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு விகிதாச்சார அடிப்படையில் கல்வியும், வேலைவாய்ப்பும் வழங்கிடுவதற்கு உருவான சமூக நீதி இயக்கம்தான் திராவிட இயக்கம்.

தி.மு.கழகம், திராவிட இயக்கத்தின் இந்த அடிப்படைக் கொள்கையை நிறைவேற்றுவதற்குத் தொடர்ந்து எல்லாவித முயற்சிகளையும் எல்லா நிலைகளிலும் மேற்கொள்ளும். 2004ஆம் ஆண்டு அமைந்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில், தி.மு.கழகம் இடைவிடாது வலியுறுத்தியதின் காரணமாக மத்திய அரசின் உயர்கல்வி நிறுவனங்களில் இதர பிற்படுத்தப்பட்டோர்க்கான 27 விழுக்காடு இட ஒதுக்கீடு ஆணை நடைமுறைக்கு வந்தது. பல நீதிமன்ற வழக்குகளையும், இடர்ப்பாடுகளையும் கடந்து 2007ஆம் ஆண்டு முதல் இந்த இடஒதுக்கீடு படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. இந்த 27 விழுக்காட்டிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முழு அளவிற்கு இந்த உரிமையைப் பெறாத அளவிற்கு வருமான வரம்பை (Creamy Layer) ஏற்படுத்தித் தடுக்கும் முயற்சிகளைக் கொள்கை அளவில் தி.மு.கழகம் உறுதியாக எதிர்க்கும்.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் உயர்கல்வி நிறுவனங்களில் முதல் கட்டமாக இடஒதுக்கீடு பெறும் வகையில் ஆண்டு வருமான வரம்பை ரூ. 4.50 இலட்சமாக உயர்த்துவதற்கு மத்திய அரசில் இடம் பெற்ற தி.மு.கழக அமைச்சர்கள் போராடி வெற்றி பெற்றுள்ளனர். இதனை ஒரு இடைக்கால ஏற்பாடாக ஏற்றுக்கொண்டு, உரிய அரசியல் சட்டத்திருத்தத்தின்வழி இடஒதுக்கீடு வழங்குவதில் வருமான வரம்பை அறவே நீக்க வேண்டும் என்று தி.மு.கழகம் வலியுறுத்தும்.

தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், இதர பிற்படுத்தப்பட்டோர் ஆகியோர்க்கு அளிக்கப்படும் இடஒதுக்கீட்டை உறுதி செய்யும் அரசாணைக்கு (Government Order) சட்டவடிவம் (Statue) அளிக்க வேண்டும் என்ற சுதர்சன நாச்சியப்பன் குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்ற தி.மு.கழகம் முயற்சிகளை மேற்கொள்ளும். இதற்குரிய சட்டவரைவினை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற தி.மு.கழகம் வலியுறுத்தும் (Bring all the Executive Orders on Reservation into a Statue).

பிற்படுத்தப்பட்டோருக்கான தேசிய ஆணையம் (National Commission for Backward Classes) அமைப்பதற்கு உரிய சட்டத்திருத்தங்களைக் கொண்டுவர வேண்டும், தமிழ்நாட்டில் இயங்குவது போல பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் ஆகியோரின் நலன் பேணுவதற்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும் தனித்தனியாகத் துறையும், அமைச்சகமும் இருப்பது போன்று மத்திய அரசில் பிற்படுத்தப்பட்டோர்க்குத் தனி அமைச்சகம் ஏற்படுத்த வேண்டும்.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றிய 69 விழுக்காடு இடஒதுக்கீடு கொள்கையை வலியுறுத்தும் சட்டம் (பிற்படுத்தப்பட்டோர் 30 விழுக்காடு, மிகப் பிற்படுத்தப்பட்டோர் 20 விழுக்காடு, தாழ்த்தப்பட்டோர் 18 விழுக்காடு, பழங்குடியினர் 1 விழுக்காடு) உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 46ஆவது பிரிவு, சமூகத்தின் நலிந்த பிரிவினர்களான பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியின மக்கள் ஆகியோர் சமூக அநீதிக்கும், எல்லாவிதமான சுரண்டலுக்கும் உள்ளாகாமல் இருப்பதற்குக் கல்வி மேம்பாடு, பொருளாதார வளர்ச்சிக்கானத் திட்டங்களை அரசு மேற்கொள்ளலாம் என்று வலியுறுத்துகிறது. இடஒதுக்கீடு போன்ற கொள்கைகளை மாநில அரசு நிறைவேற்றி அச்சட்டத்தை அரசமைப்பு விதிகள் 31(பி), 31(சி) பிரிவுகளில் வைத்து குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்ற பிறகு, 9ஆவது அட்டவணையில் இடம்

பெற்ற இந்த சமுதாய, பொருளாதாரத் திட்டங்களை நீதிமன்றங்கள் சீராய்வு (Review by the Court) செய்வதை தடை செய்துள்ளன. இந்த சட்டப் பிரிவையும் மீறி தற்போது இடஒதுக்கீடு கொள்கைகளில் மாநில அரசுகள் இயற்றும் சட்டங்களை நீதிமன்றங்கள் தடை செய்வது, நலிந்த பிரிவினரின் சமூகப் பொருளாதாரப் பாதுகாப்புத் திட்டங்களுக்குப் பெரும் தடங்கலை ஏற்படுத்தும் என்று சட்ட வல்லுநர்களும் கருத்து தெரிவித்துள்ளனர்.

எனவே, இந்திய அரசமைப்புச் சட்டத்தில் வழங்கியுள்ள பிரிவுகளின்படி சட்டமன்ற, நாடாளுமன்றங்களில் இயற்றப்படும் சட்டங்களை தடையின்றி நடைமுறைப்படுத்துவதற்கும், அவற்றில் நீதிமன்றங்கள் தலையிடாமல் இருப்பதற்கும், தேவைப்படும் உரிய அரசமைப்புச் சட்டத்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்று தி.மு.கழகம் வலியுறுத்தும்.

அந்தந்த மாநிலங்களில் வசிக்கும் தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் எண்ணிக்கைக்கு ஏற்ப இடஒதுக்கீடு விகிதாச்சாரத்தை அந்தந்த மாநிலங்களே மேற்கொள்வதற்குரிய வகையில் அரசமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்பதோடு, அந்தந்த மாநிலங்களில் உள்ள மத்திய பல்கலைக் கழகங்களிலும், உயர்கல்வி நிறுவனங்களிலும் மாநில அரசு மேற்கொண்டுள்ள விகிதத்தில் இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்றும் தி.மு.கழகம் வலியுறுத்தும்.

## மொழிக் கொள்கை (Language Policy)

இந்தியாவில் அனைத்து மொழி பேசும் மக்களின் மொழி உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், இந்தி மொழியை விரும்பாத மாநிலங்கள் மீது இந்தி திணிப்பதைத் தடுப்பதற்கும், இந்தி பேசாத மக்கள் விரும்புகிற காலம் வரை மத்திய ஆட்சி மொழியாக ஆங்கிலமே நீடிக்கும் என்றும், பிறமொழி பேசும் மக்கள்மீது இந்தி திணிக்கப்பட மாட்டாது என்றும் பண்டித நேரு வழங்கிய வாக்குறுதி எப்பொழுதும் காப்பாற்றப்பட வேண்டும் என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தி வரும் தி.மு.கழகம் – இவ்வாக்குறுதி

காப்பாற்றப்பட வேண்டுமெனில், அனைத்து மாநிலங்களிலும் ஆட்சிமொழிகளாக உள்ள இந்திய மொழிகள் அனைத்தும் (Official Indian Languages of all the States) மத்திய அரசின் ஆட்சி மொழிகளாக ஆக்கப்பட வேண்டும் என்று தி.மு.கழகம் வலியுறுத்தும்.

அதுவரை மத்திய அரசுப் பணிகளுக்கு மத்திய பணியாளர் தேர்வு வாரியம் உள்ளிட்ட அனைத்துத் துறையிலும் நடைபெறும் பணியாளர் தேர்வுகளுக்கு இந்தி, ஆங்கிலம் ஆகியவற்றோடு அந்தந்த மாநில ஆட்சி மொழிகளாக உள்ள இந்திய மொழிகளையும் இணைத்து, எழுத்துத் தேர்வு, நேர்முகத் தேர்வுகளை நடத்த வேண்டும் எனவும் தி.மு.க. வலியுறுத்தும்.

இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவு 348 உட்பிரிவு (2)உடன் இணைந்த 1963ஆம் ஆண்டு ஆட்சிமொழிச் சட்டப் பிரிவு 7ன்படி, சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புகள், தீர்ப்பாணைகள் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளிலும் நமது மாநில ஆட்சிமொழியாகிய தமிழை அறிமுகப்படுத்திடக் கழக அரசு முடிவெடுத்து, அதற்குத் தேவையான பூர்வாங்க ஏற்பாடுகளைச் செய்து மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதலைப் பெற்றுத் தரவேண்டுமென்று மத்திய அரசிடம் கோரிக்கை வைத்துள்ளோம். அந்தக் கோரிக்கை நிறைவேறி சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழ் ஒலித்திட உரிய நடவடிக்கைகள் அனைத்தையும் தொடர்ந்து மேற்கொள்வோம்.

## இலங்கைத் தமிழர் பிரச்சினை

1956ஆம் ஆண்டு முதல் இலங்கையில் தொடரும் இனச்சிக்கலைத் தீர்ப்பதற்குப் பல்வேறு போராட்டங்களையும், தமிழ்நாட்டில் கழக ஆட்சியை இரண்டு முறை கலைக்கின்ற அளவிற்கு பல்வேறு தியாகங்களையும் திராவிட முன்னேற்றக் கழகம் செய்து வருகிறது. தமிழ்நாட்டில் கலைஞர் அவர்கள் தலைமையில் இலங்கையில் தமிழர்கள் சமஉரிமையுடன் வாழ்வதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்றும் 2006ஆம் ஆண்டிற்குப் பிறகு சட்டமன்றத்தின் வழியாக தீர்மானங்கள் நிறைவேற்றியதையும், மத்திய அரசிடம்

நேரில் அனைத்துக் கட்சி தலைவர்களுடன் சென்று முதல்வர் கலைஞர் அவர்கள் வலியுறுத்தியதையும் உலகெங்கும் வாழும் தமிழர்கள் நன்றாகவே அறிவர். அரசியலுக்கு அப்பால் இப்பிரச்சினைக்கு அனைத்துக் கட்சியினரும் ஒன்றிணைந்து தீர்வுகாண வேண்டும் என்று தமிழக முதல்வர் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார். இப்பிரச்சினையை அரசியல் ஆக்காமல், போர் நிறுத்தத்திற்கும், அதனைத் தொடர்ந்த நிரந்தரமான தீர்விற்கும் திராவிட முன்னேற்றக் கழகம் இதற்கான தொடர் முயற்சிகளை மேற்கொள்ளும்.

இலங்கைத் தமிழர் படுகொலையைத் தடுத்திடவும், அங்கு நடக்கும் போர் உடனடியாக நிறுத்தப்படவும் – தமிழகத்தில் ஆளுங்கட்சியான தி.மு.க. உள்ளிட்ட அனைத்துத் தோழமைக் கட்சிகளும் நடத்திய அறவழிக் கிளர்ச்சிகள், குடியரசுத் தலைவர், பிரதமர், ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் வழிகாட்டும் தலைவர் ஆகியோருடன் டெல்லியில் சந்திப்புகள் – இவற்றின் தொடர்ச்சியாக இந்தியப் பிரதமர் அவர்கள் கடந்த **19–3–2009** அன்று முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில்,

‘‘தங்களின் பிப்ரவரி 22ந்தேதிய கடிதத்தில் இலங்கையில் ஏற்பட்டு வரும் மனித குல துயரம் பற்றி கூறியுள்ளது என்னை மிகவும் பாதித்தது. இலங்கையில் நடைபெற்று வரும் மோதலில் சிக்கியுள்ள அப்பாவித் தமிழர்களின் துயரம் மிகவும் பரிதாபத்திற் குரியது. அத்துடன் ஆயிரக்கணக்கானோர் போர்ப் பகுதிக்கு வெளியே தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள நிலை மிகவும் பரிதாபத்திற்குரியது. நாங்கள் தொடர்ந்து இலங்கை நிர்வாகத்துடன் பேசி வருகிறோம். பல மட்டங்களில் உயர் மட்ட அளவு உட்பட தொடர்பு வைக்கப்பட்டுள்ளது. நமது வெளி உறவுத் துறை செயலாளர் சமீபத்தில் கொழும்புக்குச் சென்று அந்த நாட்டு வெளி உறவுச் செயலாளர், பாதுகாப்புச் செயலாளர் மற்றும் அதிபரின் செயலாளர் ஆகியோருடன் இன்னொரு சுற்று பேச்சு நடத்தினார். அவர் அதிபர் ராஜபக்ஷேயைச் சந்தித்தார். தமிழர் களின் துயரம் பற்றிய

நமது கவலை வெளிப்படையாகத் தெரிவிக்க பட்டுள்ளது. அவர்களின் நிலைமையை சரி செய்ய சில ஆலோசனைகள் கூறப்பட்டன. அதில் மிகவும் முக்கியமானது, ஒரு மருத்துவக் குழு, மருத்துவமனை ஆகியவற்றை அமைத்து பொது மக்களுக்கும் உள்நாட்டில் குடிபெயர்ந்துள்ளவர்களுக்கும் சிகிச்சை அளிக்கக் கூறப்பட்டது. இலங்கைத் தரப்பில் நமது ஆலோசனையை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டது. அங்கு மருத்துவ மனை நிறுவப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. இலங்கைத் தரப்புடன் நமது பேச்சுவார்த்தையின் போது நாம் தொடர்ந்து தற்காலிகமாக போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என வலியுறுத்தியுள்ளோம். அது தமிழ் மக்கள் போர்ப் பகுதியிலிருந்து பாதுகாப்பான பகுதிக்கு குடி பெயர்ந்து செல்ல உதவும். பாதுகாப்பு பகுதியில் முறையான மீட்பு வசதிகள் ஏற்பாடு செய்யலாம். நமது வெளி உறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜியும் இதுபற்றி பிப்ரவரி 28ந்தேதி ஒரு அறிக்கை கொடுத் துள்ளார். இலங்கைத் தமிழ் மக்களுக்கு உள்ள கடமைகளை நிறைவேற்றும்படியும், அவர்கள் வாழும் பகுதிகளுக்கு அதிகாரப் பகிர்வு செய்து தரும்படியும் நாம் இலங்கை அரசை கேட்டுள்ளோம். இதில் தமிழர்களுக்கு சமத்துவமும், சமமான உரிமைகளும் அங்குள்ள மற்ற குடி மக்கள் போல கிடைக்க வேண்டும் என வலி யுறுத்தியுள்ளோம். சமீபத்தில் இலங்கை அதிபர், தமிழர்கள் திருப்தியடையும் வகையில் அதிகாரப் பகிர்வு செய்து தரப்படும் என்று கூறியுள்ளார். இதற்கான நடவடிக்கைகள் உடனடியாகத் தொடங்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார். நாம் காத்திருந்து என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்பதைக் கவனிப்போம்''

என்று குறிப்பிட்டுள்ளவாறு அதனை மேலும் வலியுறுத்தி இலங்கையில் தமிழர்கள் அமைதியாகவும், உரிமையுடனும் வாழ்ந்திட வழி வகுத்திட வேண்டுமென்று தி.மு.க. தொடர்ந்து வற்புறுத்தும்.

## பொருளாதாரக் கொள்கை (Economic Policy)

இந்தியப் பொருளாதாரம் கடந்த ஐந்தாண்டுகளாக 8 விழுக்காடு உயர் வளர்ச்சியைப் பெற்றது. அண்மை மாதங்களில் உலகப் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடியால் பல்வேறு தொழில்கள் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன. இதன் காரணமாக நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியில் சரிவுகள் ஏற்படத் தொடங்கியுள்ளன. தமிழ்நாடு இவ்வித அறைகூவல்களை எதிர்கொண்டு, தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் இடைவிடாத முயற்சியால் தொழில், தகவல் தொழில்நுட்பத் துறைகளில் பல புதிய தொழில் முதலீடுகளைப் பெற்று சாதனை படைத்துள்ளது.

இருப்பினும், வேளாண், தொழில், பணித் துறைகள் பாதிப்புக்கு உள்ளாகாத வகையில் தடுப்பு நடவடிக்கைகளையும், சிறப்பு நிதியுதவித் திட்டங்களையும் மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும். இவ்வகையான சிறப்புத் திட்டங்களை மாநில அரசுகளின் வழியாக நிறைவேற்றுவதில்தான் உயர்வளர்ச்சியை எதிர்காலத்தில் இந்தியா அடைய முடியும். பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு துறைகளுக்கான இலக்குகளையும் எட்ட முடியும்.

## வேளாண்மை (Agriculture)

2006ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் அமைந்த தி.மு.கழக ஆட்சி, கூட்டுறவுத் துறையின் வழியாக விவசாயிகள் பெற்றிருந்த ரூ. 7000 கோடி அளவிலான கடன் தொகையையும், வட்டியையும் தள்ளுபடி செய்தது. மேலும், கூட்டுறவு அமைப்புகள் வழியாகக் கடன் வட்டியை 9 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைத்தது. மேலும் இந்த ஆண்டு, கூட்டுறவு பயிர்க்கடன்களை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கு இனிமேல் வட்டி கிடையவே கிடையாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் ‘‘நிலவரி’’ என்பது பெயரளவிற்கு மட்டுமே வசூலிக்கப்படும் என்றும் புன்செய் நிலங்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு சராசரியாக தற்போது வசூலிக்கப்பட்டு வரும் 15 ரூபாய் இனி ஏக்கர் ஒன்றுக்கு இரண்டு ரூபாய்

என்றும், நன்செய் நிலங்களுக்கு தற்போது வசூலிக்கப்பட்டு வரும் ரூபாய் 50 என்பது இனி 5 ரூபாயாகக் குறைக்கப்படும் என்றும், தலவரி, தலமேல்வரி என்று இனி எந்த வரியும் கிடையாதென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, வேளாண் தொழிலை ஊக்குவிக்கும் வகையில் மத்திய அரசு இந்தியா முழுமைக்கும் கூட்டுறவுக் கடனை 2 விழுக்காட்டு வட்டி விகிதத்தில் வழங்க வேண்டும் என்றும், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் வழியாகவும் 2 விழுக்காட்டு வட்டியில் வேளாண் கடனை வழங்க வேண்டும் என்றும், பயிர்க்கடன்களை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்திய விவசாயிகளுக்கு தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தியது போல் வட்டியில்லா கடன் திட்டத்தை எல்லா மாநிலங்களிலும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் தி.மு. கழகம் வலியுறுத்தும்.

பதனீருக்கான கொள்முதல் விலையை லிட்டருக்கு பத்து ரூபாய் என நிர்ணயிக்கப்பட வேண்டுமென பனை தொழிலாளர்கள் எதிர் பார்ப்பையும், பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின்கீழ் இயங்கும் சங்கங் களுக்கு பனை பொருள் உற்பத்திக்கு வழங்கப்படும் மூலதனத் தொகையை உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கையையும் – பனை வெல்லத்தின் கொள்முதல் விலையை ரூபாய் நாற்பதிலிருந்து ரூபாய் ஐம்பதாக உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கையையும் – பனை தொழி லாளர்களுக்கான பயிற்சி மையங்களை தூத்துக்குடி அல்லது இராமநாதபுரம், கோவை அல்லது சேலத்தில் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையையும் மற்றும் பனை தொழிலாளர்களின் முக்கிய எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றுவதற்கு மத்திய அரசின் கதர் கிராமத் தொழில் ஆணையத்தின் வழியாக அதிக நிதி ஒதுக்கீட்டை வழங்க வேண்டுமென்று தி.மு. கழகம் வலியுறுத்தும்.

## நீர்ப்பாசனம் – நதிகள் இணைப்புத் திட்டம்

வெள்ளக் காலங்களில் காவிரி ஆற்றில் பெருகும் உபரி நீரை வறண்ட மாவட்டங்களுக்குக் கொண்டு செல்வதற்கான காவிரி–குண்டாறு இணைப்புத்

திட்டத்தின் கீழ் காவிரியின் குறுக்கே கட்டளையில் கதவணை கட்டும் திட்டத்திற்கும்; தாமிரபரணி ஆற்றின் உபரி நீரை தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களின் வறண்ட பகுதிகளுக்குக் கொண்டு செல்வதற்கான தாமிரபரணி–கருமேனியாறு–நம்பியாறு இணைப்புத் திட்டத்திற்கும் கழக அரசு ஒப்புதல் அளித்து அவற்றிற்கான பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு அரசு பருவகாலங்களில் பெய்யும் மழைநீரைச் சேகரிக்கவும், நிலத்தடி நீர் அளவை உயர்த்தவும், பல நீர்வள மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இதுபோன்ற முயற்சிகளைச் சில மாநிலங்களும் நடைமுறைப்படுத்தி வருகின்றன.

கங்கை–காவிரி ஆறுகள் இணைப்புத் திட்டம் உடனடியாக நடைமுறையில் வருவதற்குப் போதிய நிதி, தொழில்நுட்பம், சுற்றுச்சூழல் பற்றிய பல்வேறு கருத்துகள் இருப்பதால் காலதாமதம் ஏற்படுகிறது. தென்னக நதிகள் இணைப்புத் திட்டத்தின் முயற்சிகளுக்குத் தமிழக அரசின் நதிகள் இணைப்புத் திட்டம் முன்னோடித் திட்டமாக அமைவதால், மத்திய அரசு இத்திட்டத்திற்கான முழு நிதியுதவியை அளிக்க முன்வர வேண்டும். மேலும், மேற்கு நோக்கிப் பாய்ந்து கடலில் வீணே கலந்திடும் நீரைப் பாசனத்திற்கும், குடிநீருக்கும் பயன்படும் வகையில் கிழக்கே திருப்பி விடுவதற்கான திட்டங்கள் நிறைவேற்றுவதற்கு உரிய முயற்சிகளை மத்திய அரசு எடுக்க வேண்டும் என்று தி.மு.கழகம் வலியுறுத்தும்.

### நெல், கரும்பு வேளாண் விளைபொருள்களுக்கான கொள்முதல் விலையை உயர்த்தி விவசாயிகளுக்கு வழங்க வேண்டும்.

விவசாயிகளுக்கு 9 விழுக்காடு சர்க்கரை கட்டுமானமுள்ள ஒரு டன் கரும்புக்கு மத்திய அரசு குறைந்தபட்ச சட்டபூர்வ விலையாக ரூ.811.80 என அறிவித்துள்ளது. தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் மாநில அரசின் பரிந்துரை விலையாக ரூ.288.20 சேர்த்து 9 விழுக்காடு சர்க்கரை கட்டுமானமுள்ள ஒரு டன் கரும்புக்கு ரூ.1100

வழங்கப்பட்டு வருவதோடு, வாகன வாடகை ரூ.90ம் கூடுதல் கட்டுமானத்திற்கு ரூ.30ம் சேர்த்து ஒரு டன் கரும்புக்கு ரூ.1220 வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கரும்பு விலையை இப்பொழுது தருகிற ரூபாய் 1220 என்பதை உயர்த்தி 1500 ரூபாயாகத் தரப்பட வேண்டுமென்ற கரும்பு விவசாயிகளின் கோரிக்கையை கவனத்தில் எடுத்துக் கொண்டு – கரும்பு விலையை எந்த அளவுக்கு உயர்த்தி வழங்கலாம் என்பது குறித்து – அரசு அதிகாரிகள், கரும்பு விவசாயிகள், கரும்பாலை நிர்வாகம் ஆகிய முத்தரப்பினரைக் கொண்ட குழு ஒன்றினை அமைத்து, அவர்கள் தரும் பரிந்துரைகளைப் பெற்று கரும்பு விவசாயிகள் அனைவரும் மகிழத் தக்க அளவிற்கு கரும்பு விலையை நிர்ணயிக்க தி.மு.கழகம் முயற்சி களை மேற்கொள்ளும்.

விவசாயிகளின் நீண்ட காலக் கோரிக்கையை நிறைவு செய்து, நெல் கொள்முதல் விலையை குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 1000 மற்றும் ரூ. 1050 என தமிழக அரசு உயர்த்தி வழங்கி வருகிறது. கோதுமைக்கு இணையாக நெல் லுக்கும் அதே குறைந்த பட்ச ஆதரவு விலையை மத்திய அரசை அறிவிக்கச் செய்யவும், அதனைத் தொடர்ந்து, நெல் கொள்முதல் விலையை மேலும் உயர்த்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அரிசி, கோதுமை, கரும்பு போன்ற வேளாண் விளை பொருட்களுக்கு ஆண்டுதோறும் மத்திய அரசு, வேளாண் உற்பத்திச் செலவு–விலை நிர்ணயக் குழுவின் பரிந்துரையின்படி விவசாயிகளுக்குக் கொள்முதல் விலையை அளிக்கிறது. தேசிய அளவில் விலையை உறுதி செய்யும் போது, அந்தந்த மாநிலங்களில் நிலவுகிற வெவ்வேறு வகையான உள்ளீட்டு காரணிகளையும், நிலத்தின் வளத் தன்மையையும், உற்பத்தித் திறனையும் சரியான முறையில் கணக்கிட முடியாத அளவிற்கு இயற்கை, பருவகாலச் சூழல்கள் அமைந்துள்ளன. இதன் காரணமாக, மத்திய அரசு அளிக்கும் விலையோடு, மாநில அரசுகள் இப்பயிர்களுக்கு மேலும் ஆண்டுதோறும் விலையை உயர்த்தி அளிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றன. எனவே, அந்தந்த

மாநிலங்களில் நிலவுகிற உற்பத்திச் செலவு, மற்ற தன்மைகளுக்கேற்ப வேளாண் பொருட்களுக்காக மாநில அரசுகள் பரிந்துரை செய்யும் விலையைக் கணக்கில் எடுத்துக் கொண்டு மத்திய அரசு கொள்முதல் விலையை அறிவிக்க வேண்டும் என்று தி.மு.க. வலியுறுத்தும்.

2006ஆம் ஆண்டு முதல் விவசாயிகள் பயன்பெறும் வகையில் பயிர்க்காப்பீடு திட்டத்தை அறிமுகப்படுத்தி, இயற்கை இடர்பாடுகளான வெள்ளம், வறட்சி போன்றவற்றினால் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு நஷ்டஈடாக தமிழக அரசால் சுமார் ரூ.300 கோடி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை மேலும் விரிவுபடுத்தி அனைத்து விவசாயிகளையும் பயிர்க்காப்பீட்டு திட்டத்தின்கீழ்க் கொண்டு வந்து, அதற்கான காப்பீடு கட்டணத்தில், தமிழக அரசு 2006ஆம் ஆண்டிலிருந்து 50 சதவீதத்தை மானியமாக அளித்து வருகிறது. எஞ்சிய 50 விழுக்காடு காப்பீட்டுத் தொகையை மத்திய அரசு மானியமாக வழங்க வேண்டுமென்று தி.மு. கழகம் வலியுறுத்தும்.

விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் பெரும்பயன் நல்கும் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலஉதவிச் சட்டம் 2.9.2006 அன்று கழக அரசால் நிறைவேற்றப்பட்டு, இதுவரை 1 கோடியே 70 இலட்சத்து 38 ஆயிரத்து 112 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு; 3 இலட்சத்து 75 ஆயிரத்து 390 குடும்பங்களுக்கு, 247 கோடியே 49 இலட்சத்து 360 ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டம் இந்தியாவிலுள்ள அனைத்து மாநில விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்கும் பொருந்தும் வகையில் தக்கதொரு சட்டத்தை இயற்றிட மத்திய அரசு முன்வரவேண்டுமென்று வலியுறுத்துவோம்.

### ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம்

தமிழ்நாட்டில் (சென்னை நீங்கலாக) 30 மாவட்டங்களில் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் சிறப்பான முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது ஏற்படுகின்ற சில சிக்கல்களைக்

களையவும், இத்திட்டம் எதிர்காலத்தில் தொடர்ச்சியாகச் செயல்படுவதற்கும் அந்தந்த மாநிலங்களில் உள்ள வட்டார பொருளாதார நிலைமைகளுக்கு ஏற்ப இத்திட்டத்தைத் தேவைக்கேற்ப மாற்றி நடைமுறைப்படுத்துவதற்கு மாநில அரசுகளுக்கு அதிகாரம் வழங்க வேண்டும். இந்த வேலைவாய்ப்புத் திட்டத்தை மேலும் 50 நாட்களுக்கு நீட்டித்து ஆண்டுதோறும் 150 நாள் வேலைவாய்ப்பு தரும் திட்டமாக அறிவித்து மாநில அரசுகளுக்கு நிதியுதவியை வழங்க வேண்டும் என்று தி.மு.கழகம் மத்திய அரசைக் கேட்டுக் கொள்ளும்.

பொருளாதாரச் சரிவினால் வேலை இழக்கும் தொழிலாளர்களுக்கு, குறைந்தது 6 மாதங்களுக்கு உதவித் தொகை அளிக்க வேண்டும். இதற்காக வேலையிழந்தோர் துயர்துடைப்பு நிதியத்தை (Unemployed Labour Relief Fund) மத்திய அரசு அமைக்க வேண்டும்.

## சிறுபான்மையினர் நலம் (Minorities Welfare)

மத்திய அரசால் நியமிக்கப்பட்ட நீதிபதி சச்சார் குழு, இசுலாமிய சமுதாயத்தினருக்கு கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார வளர்ச்சி ஆகியன பற்றி பரிந்துரைகளை அளித்துள்ளது.

2007ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு, இசுலாமிய சமுதாயத்தினரின் சமூகப் பொருளாதார நலன்களை மேம்படுத்துவதற்கு நீதியரசர் ஜனார்த்தனன் தலைமையில் ஒரு குழுவினை அமைத்தது. இக்குழு இசுலாமியர்களுக்கு 3.5 விழுக்காடு தனி இட ஒதுக்கீட்டை கல்வி, வேலைவாய்ப்புகளில் வழங்க ஆணை பிறப்பித்துள்ளது. மேலும், சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தை உருவாக்கி, இசுலாமியர்களுக்கும், கிறித்தவர்களுக்கும் நிதியுதவி, கடன் வசதி உட்பட பல நலத்திட்டங்களை வழங்கி வருகிறது. எனவே, தமிழ்நாடு அரசினை முன்னுதாரணமாக எடுத்துக் கொண்டு, சச்சார் குழுவின் பரிந்துரைகளை மத்திய அரசு ஏற்று உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று தி.மு.க. வலியுறுத்துகிறது.

இந்து மற்றும் பௌத்த மதங்களைச் சார்ந்த ஆதிதிராவிடர்களுக்கு இணையாக; கிறித்துவ மதத்தைச் சார்ந்த ஆதிதிராவிடர்களையும் அட்டவணைப் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்றும்; சிறுபான்மையினர் மேம்பாட்டுக்கு நீதியரசர் ரங்கநாத் மிஸ்ரா அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட தேசிய ஆணையம் செய்துள்ள பரிந்துரைகளைப் பரிசீலனை செய்து நடைமுறை அறிவிப்புகளை வெளியிடவேண்டுமென்றும் மத்திய அரசை வலியுறுத்துவோம்.

## பிற்படுத்தப்பட்டோர் நலன் (Backward Classes Welfare)

மத்திய அரசில் பிற்படுத்தப்பட்டோருக்காகவும், தாழ்த்தப் பட்டோருக்காகவும், நாடாளுமன்ற நிலைக் குழுக்கள் இருந்த போதிலும், அவர்களுக்கென்று தனித்தனியாக இடஒதுக்கீடு அளிக்கப்பட்ட போதிலும், ஏழை, எளிய குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள் இந்த சலுகைகளை முழு அளவில் பெற முடியாத சூழ்நிலை காணப்படுகிறது. தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்குத் தங்கும் விடுதி வசதியையும், கல்வி உதவித் தொகையையும் வழங்குவதற்கு, மத்திய அரசு உரிய நடவடிக்கைகளை வரும் கல்வியாண்டிலிருந்து நடைமுறைப்படுத்த வேண்டும் என்று தி.மு.க. வலியுறுத்தும்.

## தாழ்த்தப்பட்ட, பழங்குடி வகுப்பு மாணவர்களுக்கு இலவசக் கல்வி

தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மாணவர்கள் மருத்துவம், பொறியியல் பட்டப்படிப்புகளை எவ்விதத் தடைகளுமின்றி மேற்கொள்வதற்கு ஏதுவாக, கல்லூரிக் கல்விக் கட்டணம், தேர்வுக் கட்டணம் உட்பட அனைத்தையும் மத்திய அரசு உதவித் தொகையளித்து ஏற்க வேண்டும் என்று தி.மு.கழகம் வலியுறுத்துகிறது.

**தாழ்த்தப்பட்ட சமுதாயப் பிரிவில் உள் ஒதுக்கீடு – தமிழ்நாட்டில் அருந்ததி சமூகத்தினருக்கு 3 விழுக்காடு இட ஒதுக்கீடு அளித்த முறையைப் பின்பற்ற வேண்டும்**

தமிழ்நாட்டிலும், பல மாநிலங்களிலும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் பல பிரிவுகள் உள்ளன. இடஒதுக்கீடு கொள்கையின் வழியாக ஒட்டுமொத்த தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் பயன்பெற்று வந்தாலும், இச்சமூகத்தினரில் ஒரு பிரிவினர் சமுதாயப் பொருளாதார நிலைகளில் மிகமிக பின்தங்கியவராக

உள்ளனர். இந்நிலையை மாற்ற தமிழ்நாட்டில் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் எடுத்த பெரும் முயற்சியால் தாழ்த்தப்பட்ட பிரிவில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கும் அருந்ததியினருக்கு தனியாக 3 விழுக்காடு உள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதை முன்னுதாரணமாகக் கொண்டு மற்ற மாநிலங்களிலும் தாழ்த்தப்பட்ட பிரிவினரில் மிகப் பின்தங்கியோரை இனம் கண்டறிந்து, தமிழ்நாட்டில் அருந்ததியினருக்கு வழங்கிய தனி இடஒதுக்கீடு போன்று வழங்கிட மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தி.மு.கழகம் வலியுறுத்தும்.

## தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் (SC/ST)

1971ஆம் ஆண்டில் கலைஞர் ஆட்சியில் குடிசை மாற்று வாரியம் அமைத்து, நகரங்களில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த எளிய மக்களுக்குப் பல்லாயிரக்கணக்கான அடுக்குமாடி வீடுகள் கட்டித்தரப்பட்டன.

1996இல் மீண்டும் கலைஞர் ஆட்சிக்கு வந்த போது, அனைத்து சமூகப் பிரிவினரும் இணைந்து வாழும் வகையில் பெரியார் நினைவு சமத்துவபுரங்கள் 1மாவட்டந்தோறும் அமைக்கப்பட்டன.

மேற்கூறிய திட்டங்களில் விடுபட்டுப்போன ஊர்ப்புறங்களில் குடிசைகளிலே வாழ்ந்து வருகின்ற தாழ்த்தப்பட்ட சமுதாயப் பிரிவினர் அனைவருக்கும் தரமான வீடுகள் கட்டித்தருவதற்கு மத்திய அரசு, மாநில அரசின் நிதிப்பங்கேற்புடன் செயல் திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து நிறைவேற்றப்பட வேண்டுமென்று வலியுறுத்துவோம். இத்திட்டத்தின் வழியாக 2014ஆம் ஆண்டிற்குள் தமிழகத்தின்

அனைத்துத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர்க்கும் வீடுகள் கட்டித்தரப்பட வேண்டுமென்று தி.மு. கழகம் வலியுறுத்தும்.

வரும் ஐந்தாண்டுகளில் குடிசைகளே இல்லாத கிராமங்களையும், குப்பங்களே இல்லாத நகரங்களையும் உருவாக்கிட உறுதியேற்கிறோம். சாதி மத வேறுபாடின்றி– குடிசை வீடுகளில் வாழ்ந்து வரும் அனைத்துக் குடும்பங்களுக்கும் தரமான கான்கிரீட் வீடுகள் கட்டித் தரப்படும். பயனாளிகளின் பங்களிப்பு, அரசு மானியம், கடன் ஆகியவற்றைக் கொண்டு இவ்வகை வீடுகள் உருவாக்கப்படும்.

2006, மே மாதம் கழக ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பின்னர் இதுவரை 6 இலட்சத்து 56 ஆயிரம் ஏழைக் குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. தரமான கான்கிரீட் வீடுகள் கட்டி வழங்கும் திட்டத்தில், இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் பெற்றுள்ள ஏழைக் குடும்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

### மத்திய அரசின் மக்கள் நல்வாழ்வுத் துறையில் இடஒதுக்கீடு முறை பின்பற்றப்பட வேண்டும்

மத்திய அரசின் மக்கள் நல்வாழ்வுத் துறையால் நிர்வகிக்கப்படும், Diploma in National Board முதுநிலை மருத்துவப் படிப்புகளில் தாழ்த்தப்பட்ட, பழங்குடியின, பிற்படுத்தப்பட்ட, இதர பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு இதுவரை இடஒதுக்கீடு கொள்கை முழுமையாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளது. எனவே, தாழ்த்தப்பட்ட (15 விழுக்காடு), பழங்குடியின (7.5 விழுக்காடு), இதர பிற்படுத்தப்பட்ட (27 விழுக்காடு), மாணவர்களுக்கான மேற்குறிப்பிட்ட நிறுவனத்தின் மருத்துவப் படிப்புகளில் இடஒதுக்கீட்டை உடனடியாக வரும் கல்வியாண்டிலிருந்து நடைமுறைப்படுத்த வேண்டும் என்று தி.மு.கழகம் வலியுறுத்தும்.

### மகளிருக்குச் சிறப்பு மருத்துவ சிகிச்சை

பெண்களுக்கு கருப்பை வாயில் ஏற்படும் புற்றுநோய் (Carcinoma Cervix) அண்மைக் காலங்களில் ஊரகப் பகுதிகளில் அதிகம் பரவி வருகிறது. இந்நோயைக் களைவதற்கும், முன்தடுப்பு சோதனையை (HPV DNA Testing and Colposcopy) மேற்கொள்வதற்கும், சிகிச்சையளிக்கவும் மாநில அரசுகளுக்கு மத்திய அரசு முழு நிதியுதவியை அளிக்க வேண்டும் என்று தி.மு.க. வலியுறுத்தும்.

### பெரும்பான்மையான மக்களை பாதிக்கும் நோய்களுக்கான மருந்துகளை இன்றியமையாத மருந்து பொருட்கள் விற்பனைப் பட்டியலில் சேர்க்க உடனடி நடவடிக்கை

அண்மைக்காலமாக மருந்துப் பொருட்களின் விலை அதிக அளவில் உயர்ந்து வருகிறது. ஏழை, எளிய, நடுத்தர குடும்பத்தினர் இந்த விலை உயர்வால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக, நீரிழிவு நோயினால் ஏற்படும் சிறுநீரக பாதிப்பு, இரத்தக் கொதிப்பு, பக்கவாதம், இதய நோய்கள், இரத்தக் குழாய்களில் ஏற்படும் கொழுப்பு ஆகிய நோய்களைத் தடுக்கும் மருந்து ஒரே மாத்திரை (Polydrug-Aspirin+Statin+Aceinhibitor) வடிவில் தற்போது விற்பனையில் உள்ளது. இதனை மக்கள் அதிக விலை கொடுத்து வாங்க முடியாத நிலை உள்ளது. இது போன்ற நோய்களுக்கான இன்றியமையாத மருந்துகள் நியாய விலையில் மக்களுக்குக் கிடைப்பதற்கு அவற்றை இன்றியமையாத விற்பனைப் பட்டியலில் (Essential Drug List) மத்திய அரசு கொண்டு வர வேண்டும் என்று தி.மு.கழகம் வலியுறுத்தும்.

மேலும், ஊரகப் பகுதிகளில் உள்ள பெண்கள், வேளாண் தொழிலில் ஈடுபடும் விவசாயிகள், கடும் உழைப்பு பணியில் ஈடுபடும் தொழிலாளர்கள், நெசவுத் தொழிலாளர்கள் ஆகியோரின் உடல்நலத்தைப் பேணும் புதுவகை மருந்துகளையும், சுவாசிக்கும் மருந்துக் கருவியையும் (Respiratory Inhaler) வணிகப் பட்டியலில்

இருந்து நீக்கி, இன்றியமையாத பட்டியலில் கொண்டுவர வேண்டும் என்று தி.மு. கழகம் வலியுறுத்தும்.

### மத்திய அரசின் மக்கள் நல்வாழ்வுத் துறையின்கீழ் செயல்படும் நோய்த்தடுப்பு மருந்து (Vaccine) உற்பத்தி செய்யும் நிறுவனங்களை பொதுத்துறையிலேயே நீடிக்கச் செய்ய வேண்டும்

குன்னூரில் பாஸ்டியர் நிறுவனத்தைத் தனியார் துறைக்கு ஒப்படைக்கும் முயற்சிகளைக் கைவிட வேண்டும். புதிய தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி உலகத்தரத்திற்கு இணையாக இந்த நிறுவனத்தை மாற்றி பொதுத் துறையிலேயே இயங்குவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள தி.மு.கழகம் வலியுறுத்தும். இவற்றுடன் பாம்புக்கடிக்கான தடுப்பு மருந்தையும் பொதுத்துறை நிறுவனங்களே உற்பத்தி செய்ய வேண்டும் என்பதை தி.மு.க. வலியுறுத்தும்.

### மருந்து ஆய்வு வளர்ச்சி நிறுவனங்கள் (Research and Development Laboratories in Medical Drugs)

மருந்து ஆய்வு வளர்ச்சி நிறுவனங்களைப் பொதுத் துறையில் இந்தியாவின் நான்கு முக்கியப் பகுதிகளில் தொடங்க வேண்டும் என்றும் முதற்கட்டமாக இந்த மையத்தைத் தமிழகத்தில் அமைக்க வேண்டும் என்றும் தி.மு. கழகம் வலியுறுத்தும். இந்த மையங்கள் மருந்துகளின் தரத்தை உயர்த்தவும், அந்த மருந்துகளை மக்கள் எளிதில் பயன்படுத்தக் கூடிய வகையிலும் அமையும்.

### மருத்துவக் கல்லூரி மாணவர்களை பாதிக்கும் தேர்வுத் திட்டத்தை மத்திய அரசு மக்கள் நல்வாழ்வுத் துறை கைவிட வேண்டும்

மருத்துவ பட்டப்படிப்பு பயிலும் தாழ்த்தப்பட்ட, இதர பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் பாதிப்புக்கு உள்ளாகும் வகையில் நடைமுறையில் உள்ள முதலாமாண்டு மருத்துவ தேர்வு முறை அமைந்துள்ளது.

இந்நிலையை மாற்றி, 1998ஆம் ஆண்டிற்கு முன்பிருந்தபடியே இரண்டாமாண்டு பட்டப்படிப்பைத் தொடர்ந்து கொண்டே முதலாமாண்டு தேர்வை எழுதும் வாய்ப்பினை மீண்டும் மாணவர்களுக்கு அளிக்க வேண்டும். இதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள மத்திய அரசின் மக்கள் நல்வாழ்வுத் துறை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தி.மு. கழகம் வலியுறுத்தும்.

உயர் மருத்துவப் பட்டப் படிப்புகளில் 100 விழுக்காட்டு இடங்களையும் மீண்டும் மாநில அரசுகளுக்கே வழங்க வேண்டும்

மருத்துவ உயர் பட்டப்படிப்புகளில் தற்போது 50 விழுக்காட்டு இடங்களை அகில இந்திய ஒதுக்கீட்டின் அடிப்படையில் மற்ற மாநில மாணவர்கள் பெற்று வருகின்றனர். இவ்வித முறையால் தமிழ்நாட்டில் மருத்துவப் பட்டப்படிப்பு பயிலும் மாணவர்கள் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகின்றனர். ஏற்கனவே, தமிழ்நாட்டில் குடிபெயர்ந்து வாழும் மற்ற மாநிலத்தவர்க்கு மருத்துவக் கல்லூரி உட்பட எல்லா கல்லூரிகளிலும் இடம் பெறும் வாய்ப்புகள் உள்ளன. எனவே, சில ஆண்டுகளாக கடைபிடிக்கப்படும், மத்திய அரசு தொகுப்பிற்கு 50 விழுக்காடு இடங்களை அளிக்கும் முறையைத் திரும்பப் பெற வேண்டும் என்று தி.மு.கழகம் வலியுறுத்தும்.

## கல்வி (Education)

### மாநிலப் பட்டியலில் மீண்டும் கல்வித் துறை

1950இல் நடைமுறைக்கு வந்த இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி கல்வி மாநிலப் பட்டியலிலேயே இருந்தது. பல்வேறு இன, மொழி, பண்பாட்டு அடையாளங்களைக் கொண்ட இந்தியாவில், கல்வித்துறை மாநிலங்களின் கட்டுப்பாட்டில் இருப்பதுதான் சிறப்பாக இருக்கும் என மத்திய அரசு அமைத்த கோத்தாரி குழுவும் பரிந்துரைகளை அளித்துள்ளது. 1976க்குப் பிறகு கல்வியைப் பொதுப்பட்டியலுக்கு எடுத்துச் சென்றதன் காரணமாகப் பல இடையூறுகளும்,

முரண்பாடுகளும் கல்வி வளர்ச்சியில் ஏற்பட்டு வருகின்றன. எனவே, மீண்டும் கல்வியை மாநிலப் பட்டியலுக்குக் கொண்டுவர வேண்டும் என்று தி.மு.கழகம் வலியுறுத்தும்.

கல்வி, மக்கள் நல்வாழ்வுத் துறைக்கான பொதுச் செலவுகளை அதிகரிக்க வேண்டும்

சென்ற 2004 நாடாளுமன்றத் தி.மு.கழக தேர்தல் அறிக்கையில் மொத்த தேசிய வருமானத்தில் கல்விக்கு 6 விழுக்காடும், மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு 2 விழுக்காடும் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் குறைந்தபட்ச பொது வேலைத் திட்டத்தில் தி.மு.கழகத்தின் இந்த கோரிக்கைகள் ஏற்கப்பட்டு தற்போது 4 விழுக்காடு அளவிற்குக் கல்விக்கான பொதுச் செலவை மத்திய அரசு உயர்த்தியுள்ளது. இருப்பினும், மக்கள் நல்வாழ்வுத் துறைக்கான நிதி ஒதுக்கீடு மொத்த தேசிய வருமானத்தில் ஒரு விழுக்காடு அளவிற்கே உயர்ந்துள்ளது. எனவே, வருகின்ற ஐந்தாண்டுகளில், கல்விக்கான பொதுச் செலவை தேசிய வருமானத்தில் 7 விழுக்காடாகவும், மக்கள் நல்வாழ்வுத் துறைக்கான பொதுச் செலவை 3 விழுக்காடாகவும் உயர்த்த வேண்டும் என்று தி.மு. கழகம் வலியுறுத்தும்.

கல்வி, மக்கள் நல்வாழ்வுத் துறைகள் முழுமையாக மாநில அரசுகளின் கட்டுப்பாட்டில் இயங்குவதாலும், ஏழை, எளியோர்க்காக தமிழ்நாடு அரசு பல முற்போக்கான கல்வித் திட்டங்களையும், நல்வாழ்வுத் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி வருவதாலும், இதுபோன்ற திட்டங்களை மற்ற மாநிலங்களும் நிறைவேற்றி வருவதாலும் இந்த உயர்விற்குத் தேவைப்படும் ஒதுக்கீட்டை மாநில அரசுகளிடமே முழுமையாக அளித்துவிட வேண்டும் என்று தி.மு.கழகம் கேட்டுக் கொள்ளும்.

## அடிப்படைக் கட்டமைப்பு (Infrastructure)

### சேதுக்கால்வாய் திட்டத்தை விரைந்து நிறைவேற்ற வேண்டும்

தமிழர்களின் நீண்டகால கோரிக்கையான சேதுக் கால்வாய் திட்டம் தமிழக முதல்வர் கலைஞர் தொடர்ந்து வலியுறுத்தியதின் காரணமாக 2.7.2005 அன்று தொடங்கப்பட்டு பணிகள் நிறைவடையும் நேரத்தில் மத காரணங்களைக் காட்டி தடை செய்யப்பட்டுள்ளது. உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கை மத்திய அரசு விரைந்து முடித்து இத்திட்டத்தின் எஞ்சிய பணிகளை முடித்து தமிழ்நாட்டின் தென் மாவட்ட பொருளாதார வளர்ச்சிக்கும், இந்தியாவின் பாதுகாப்பிற்கும் வழிகோல வேண்டும் என்று தி.மு.கழகம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளும்.

### தொடர்வண்டிப் போக்குவரத்து

வெகுவேக ‘‘புல்லட் டிரெயின்’’ சேவைகளை சென்னை–கோவை, சென்னை–மதுரை ஆகிய வழித்தடங்களில் அறிமுகம் செய்வதற்கான நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ள வேண்டுமென்றும்; புதுடில்லியையும் சென்னையையும் இணைத்திடும் வகையில் சரக்குப் போக்குவரத்துக்கென்று சிறப்பு வழித்தடம் ஒன்றை (Dedicated Freight Corridor) உருவாக்கிட வேண்டுமென்றும்; திண்டுக்கல்லிலிருந்து போடிநாயக்கனூர் வழியாக குமுளி, திருவண்ணாமலையிலிருந்து ஜோலார்பேட்டை, நீடாமங்கலத்திலிருந்து மன்னார்குடி வழியாக பட்டுக்கோட்டை, மொரப்பூரிலிருந்து தர்மபுரி, அரியலூரிலிருந்து திருவையாறு வழியாக தஞ்சாவூர் ஆகிய புதிய அகல இரயில் பாதைகளை உருவாக்கிட வேண்டுமென்றும் மத்திய அரசை வலியுறுத்துவோம்.

சென்னை–வேளச்சேரி வரை தற்போது இயங்கிவரும் பறக்கும் இரயில் திட்டத்தை மாமல்லபுரம் வரை விரிவுபடுத்த வேண்டும் என்றும்;

தற்போது தமிழ்நாட்டின் பல நகரங்களுக்கும், வெளி மநிலங்களுக்குமிடையே இயங்கிவரும் விரைவுத் தொடர்வண்டிகளோடு நவீனத் தரத்துடன் கூடிய அதிவேக

விரைவுத் தொடர் வண்டிகளையும் இயக்க வேண்டும் என்றும் தி.மு. கழகம் வலியுறுத்தும்.

### தொடர்வண்டி இணைப்புப் பெட்டி உற்பத்தித் தொழிற்சாலை

சென்னை பெரம்பூரில் இயங்கிவரும், தொடர்வண்டிப் பெட்டி உற்பத்தி செய்யும் இணைப்பு இரயில் பெட்டித் தொழிற்சாலையின் (ICF) இரண்டாவது கட்டத்தை தமிழ்நாட்டில் விரிவுபடுத்த வேண்டும் என்று தி.மு. கழகம் கேட்டுக் கொள்ளும்.

## தொழில் துறை (Industries)

### இந்தியத் தொழில்களைப் பாதுகாக்க வேண்டும்

அண்மைக்காலமாக அமெரிக்க பொருளாதாரத்தில் ஏற்பட்ட சரிவு காரணமாக வளர்ந்த, வளர்கின்ற நாடுகளில் உள்ள தொழில்கள் பல சிக்கல்களைச் சந்தித்து வருகின்றன. இந்த பொருளாதாரத் தேக்க நிலையால், இந்தியாவில் உள்ள தொழில்களும், சிறு, குறுந்தொழில்களும் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றன. எனவே, இந்த தொழில்களைப் பாதுகாக்கவும், வேலைவாய்ப்பினைப் பெருக்கவும் பொதுத்துறை நிதிநிறுவனங்கள் வழியாக நிதியுதவிகளை அளித்து இத்தொழில்களைப் பாதுகாக்க வேண்டும். இந்த பாதிப்பிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு மற்ற நாடுகள் கடைபிடிக்கும் நடைமுறையைப் போல இறக்குமதி, ஏற்றுமதிக் கொள்கைகள், வரி விதிப்புக் கொள்கைகளில் உரிய மாற்றங்களைக் கொண்டு வந்து இந்தியத் தொழில்களை நலிவடையாமல் பாதுகாக்க வேண்டும் என்று தி.மு. கழகம் கேட்டுக் கொள்கிறது.

இந்தியாவின் மேற்குக் கடற்கரைத் துறைமுகங்களையும், கிழக்குக் கடற்கரைத் துறைமுகங்களையும் இணைத்திடும் வகையில் அமைந்துள்ள குளச்சல் சிறுதுறைமுகத்தை, நவீன ஆழ்கடல் சரக்குப் பெட்டக முனையமாக (A Modern Deep Water Container Port) மேம்படுத்திட மத்திய அரசை வலியுறுத்துவோம்.

### சூரிய ஒளி (சோலார் எனர்ஜி) மின் உற்பத்தி நிலையத்தை முன்னோடித் திட்டமாக தமிழகத்தில் அமைக்க வேண்டும்

சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் நோக்குடன் மரபு சாரா எரிசக்தியை வளர்த்தெடுக்க வேண்டும் என்று மத்திய அரசின் திட்டக்குழு அறிக்கை வலியுறுத்துகிறது. தமிழ்நாட்டில் ஏற்கனவே காற்றாலை மின்னுற்பத்தித் திறனை அதிகரித்து, தமிழ்நாடு மரபுசாரா எரிசக்தி உற்பத்தியில் இந்தியாவிலேயே முன்னிலை மாநிலமாக உள்ளது. இந்தியாவிலேயே சூரிய ஒளியின் வெப்பத்திறன் அதிகமாக உள்ள மாநிலங்களில் தமிழ்நாடும், இராஜஸ்தானும் முன்னிலை வகிக்கின்றன. மரபுசாரா எரிசக்தித் துறையில் முதலீடுகளை ஊக்குவிக்கும் ஒரு முன்னோடித் திட்டமாக மத்திய அரசு 250 மெகாவாட் திறன் கொண்ட ஒரு சூரிய ஒளி மின்னுற்பத்தித் திட்டத்தைத் தமிழகத்தில் அமைக்க வேண்டும் என்று தி.மு. கழகம் வலியுறுத்தும்.

### மீனவர் நலன் (Fishermen Welfare)

கடற்கரைப் பகுதிகளில் வாய்ப்புள்ள இடங்களில் மீன்பிடித் துறைமுகம் ஏற்படுத்தவும், தற்போதுள்ள கன்னியாகுமரி, தூத்துக்குடி, நாகப்பட்டினம், கடலூர், புதுவை, சென்னை காசிமேடு ஆகிய இடங்களில் உள்ள துறைமுகங்களில் தண்ணீர் வசதி, மின் வசதி போன்ற இன்றியமையாத் தேவைகளுடன் மேம்படுத்தவும், இந்தியாவில் உள்ள அனைத்துக் கடலோர, உள்நாட்டு மீனவர்களின் நலன்களைப் பாதுகாக்கவும், தேசிய மீனவர் நல ஆணையம் (National Commission for Fisherman Welfare) உருவாக்கவும் உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள தி.மு. கழகம் வலியுறுத்தும்.

### தமிழக மீனவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும்

தமிழக மீனவர்கள் இராமேசுவரம் பகுதியில் அடிக்கடி இலங்கை இராணுவத்தினரால் தாக்கப்படுவதற்கும், சுட்டுக் கொல்லப்படுவதற்கும் தி.மு.கழகம்

கடுமையான முறையில் தனது கண்டனத்தைத் தெரிவித்து வருகிறது. தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் இந்தியப் பிரதமருக்கு பல மடல்கள் எழுதியும், நேரில் சென்று வலியுறுத்தியும் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளார். இதற்குரிய நிரந்தரத் தீர்வைக் காண்பதற்கு மத்திய அரசு கடலோரப் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்தி, தமிழக மீனவர்களின் மீன்பிடிக்கும் உரிமையை உறுதி செய்ய வேண்டும் என்று தி.மு. கழகம் வலியுறுத்தும்.

கடலோர மீனவ சமுதாயத்தினர் ஏற்றுக்கொள்ளும்வரை கடற்கரை மேலாண்மைப் பகுதி அறிவிக்கையின் (Coastal Management Zone Notification) மீது நடவடிக்கை மேற்கொள்ளக் கூடாது என்று மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்துவோம்.

### கச்சத்தீவில் தமிழர்கள் உரிமை நிலைநாட்டப்பட வேண்டும்

கச்சத்தீவின் உரிமையை மீட்டெடுக்க வேண்டும் என்று 1974ஆம் ஆண்டிலிருந்து தி.மு.கழகம் இந்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. 1974ஆம் ஆண்டு போடப்பட்ட ஒப்பந்தத்தில் தமிழக மீனவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த மீன், மீன் வலை உலர்த்துதல் மற்றும் தேவாலயங்களில் வழிபாட்டுரிமை ஆகிய ஷரத்துகள் 1976ஆம் ஆண்டு குடியரசு தலைவர் ஆட்சியில் மீண்டும் பறிக்கப்பட்டு விட்ட சூழ்நிலையில், கச்சத்தீவிற்குத் தமிழர்கள் செல்வதற்கும், அப்பகுதியை ஒட்டிய இடங்களில் இழந்த உரிமையை மீட்டெடுப்பதற்கும் மத்திய அரசு உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று தி.மு.கழகம் தொடர்ந்து வலியுறுத்தும்.

### நிதியியல் பொறுப்பு வரவு–செலவு மேலாண்மைச் சட்டம் (Fiscal Responsibility and Budgetary Management Act) நீக்கப்பட வேண்டும்.

மத்திய அரசும், மாநில அரசுகளும் நிதி நிலைப் பொறுப்புடைமைச் சட்டங்களை இயற்றி, அவற்றில் வரையறுக்கப்பட்டுள்ள இலக்குகளை எய்த வேண்டுமென பன்னிரண்டாவது நிதிக்குழு பரிந்துரைத்தது. அதன் அடிப்படையில் தமிழகமும் 2003ஆம் ஆண்டில் இச்சட்டத்தை இயற்றி பின்பற்றி வருகிறது. அண்மையில் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சரிவால் விளைந்துள்ள வருவாய் வீழ்ச்சி மற்றும் உயர்ந்துள்ள செலவினங்கள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு மத்திய அரசு மேற்கூறிய சட்டத் திலிருந்து விதி விலக்கு பெற முடிவு செய்து பொதுக் கடனை உயர்த்தி யுள்ளது. இது போன்றே மாநில அரசுகளுக்கும் விதி விலக்களித்து மாநிலங்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டுமென்று தி.மு. கழகம் வலியுறுத்தும்.

## மாநிலங்களுக்கு நிதிஒதுக்கீடு (Devolution of Funds to States)

மத்திய அரசின் ஒட்டுமொத்த வரி வருவாயில் 60 விழுக்காட்டை மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டும்.

மத்திய அரசு விதிக்கும் மேல் வரிகள் (Cess and Surcharge) மாநில அரசுகளுக்குப் பகிர்வு செய்யப்படுவதில்லை. எனவே, அனைத்து மேல் வரிகள் விதிப்பதையும் மத்திய அரசு தவிர்த்து, வரி விகித உயர்வினைப் பின்பற்ற வேண்டும் என்று தி.மு. கழகம் வலியுறுத்தும். இதனால் நிதிக்குழுவின் பரிந்துரை வழியாக வரிவருவாயின் உரிய பங்கு மாநிலங்களுக்குக் கிடைக்கும்.

நிதிக்குழுவின் அமைப்பு (Constitution of Finance Commission), ஆய்வு விதிகள் (Terms of Reference) ஆகியன மாநிலங்களுக்கான மன்றத்தில் (Inter-State Council) மட்டுமே முடிவு செய்தல் வேண்டும் என்று தி.மு.க. வலியுறுத்தும்.

## தென்மண்டல எரிவாயுத் தொகுப்பு (Southern Gas Grid)

கடந்த 45 ஆண்டுகளாகக் கழகம் வலியுறுத்தி வருகிற தென்மண்டல இயற்கை எரிவாயு இணைப்பு விரைவில் உருவாக அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

தமிழகம் முழுவதும் இயற்கை எரிவாயுக் குழாய் அமைப்பை ஏற்படுத்த மத்திய அரசு ஆவன செய்ய வேண்டுமென்று தி.மு.க. வலியுறுத்தும்.

### மத்திய அரசின் எண்ணெய், இயற்கை எரிவாயு ஆணையத்தின் ஆய்வு வளர்ச்சி மையம் (ONGC-Research and Development Wing) தமிழ்நாட்டில் அமைக்க வேண்டும்

தமிழ்நாட்டின் காவிரிப் படுகையிலும், மற்ற கடற்கரைப் பகுதிகளிலும் பெட்ரோலிய, எரிவாயு வளங்கள் கண்டறியப்பட்டுள்ளன. மேலும், பதினோராவது ஐந்தாண்டுத் திட்ட அறிக்கையில் எரிசக்தித் திறனை வளர்க்க வேண்டும் என்று மத்திய அரசு வலியுறுத்தி உள்ளதாலும், இந்நிறுவனத்தின் (ONGC) உயர் ஆய்வு, வளர்ச்சி மையத்தைத் தமிழ்நாட்டில் அமைக்க வேண்டும் என்று தி.மு. கழகம் கேட்டுக் கொள்ளும்.

### இந்திய அறிவியல் ஆய்வு மையத்தை (Indian Institute of Sciences) தமிழ்நாட்டில் தொடங்க வேண்டும்

இந்திய மாநிலங்களிலேயே தமிழ்நாட்டில்தான் அரசுக் கல்லூரிகளும், அரசு உதவி பெறும் கல்லூரிகளும், சுயநிதிக் கல்லூரிகளும் அதிக எண்ணிக்கையில் இருப்பதாலும், ஏராளமான மாணவர்கள் அறிவியல் பட்டங்களை அதிக அளவில் பெறுவதாலும், அறிவியல் திறனை மேம்படுத்தவும், உயர் ஆராய்ச்சித் திறனை மேம்படுத்தவும் மத்திய அரசின் இந்திய அறிவியல் ஆய்வு மையம் ஒன்றினைத் தமிழகத்தில் அமைக்க வேண்டும் என்று தி.மு. கழகம் வலியுறுத்தும்.

## வருமான வரி விலக்கு (Income Tax Exemption)

நடுத்தர வர்க்கத்தினர், அரசு ஊழியர்கள், மாத ஊதியம் பெறும் பிரிவினர், ஓய்வூதியம் பெறுவோர் ஆகியோருக்குத் தற்போதுள்ள ரூ.1,50,000 என்ற வருமான வரம்பை ரூ.2,50,000 என்று உயர்த்த வலியுறுத்துவோம்.

## புலம்பெயர்ந்தோர் நலன் (Migrants Welfare)

வெளிநாடுகளுக்கு வேலைக்குச் செல்லும் இந்தியர்களுக்கு, பாதுகாப்பு அளிக்க வழிவகைகள் காண தொடர்ந்து வலியுறுத்துவோம்.

வெளிநாடுகளில் வசித்துவரும் இலட்சக்கணக்கான தமிழர்களின் ஜனநாயக, பொருளாதார, மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வோம்.

## மகளிர் நலன் (Women's Welfare)

### சொத்தில் சம உரிமை

பெண்களுக்கு சொத்துரிமையில் சமபங்கு என தமிழ்நாட்டில் உள்ளது போன்று இந்திய அளவிலும் சட்டம் வரவேண்டும் என்று தி.மு. கழகம் வலியுறுத்தும்.

### நாடாளுமன்ற சட்டமன்றங்களில் பெண்களுக்கு 33 விழுக்காடு இட ஒதுக்கீடு

சென்ற ஐந்தாண்டு காலமாக கட்சிகளுக்கிடையே ஒருமித்த கருத்தை எட்டமுடியாததால் நாடாளுமன்றங்களில் பெண்களுக்கான 33 விழுக்காடு இடஒதுக்கீடு சட்டம் நாடாளுமன்றத்தில் முன்மொழியப்பட்டாலும் நிறைவேற்றப்படவில்லை. பெண்களுக்கான உரிமையை வழங்கும் இந்தச் சட்டத்தை வருகின்ற நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற மத்திய அரசு முன்வர வேண்டும் என்று தி.மு.கழகம் தொடர்ந்து வலியுறுத்தும்.

### வேலைவாய்ப்பில் பெண்களுக்கு முன்னுரிமை

தமிழ்நாட்டில் ஆரம்பப்பள்ளி ஆசிரியர் நியமனத்தில் பெண்கள் மட்டுமே நியமிக்கப்படுவார்கள் என்று கழக ஆட்சியில் அறிவித்து, பின்னர் நீதி மன்றத்தின் அறிவுறுத்தல் காரணமாக தற்போது 75 சதவிகித விழுக்காடு நியமனம் பெண்களுக்கே அளிக்கப்படுகிறது. மற்ற அனைத்து வேலைவாய்ப்புகளிலும் 33 விழுக்காடு

பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. உள்ளாட்சி அமைப்புகளிலும் பெண்களுக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீடு அளிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் போற்றப்படுகிற பெண்ணுரிமைச் சட்டங்களையும், திட்டங்களையும் அகில இந்திய அளவில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் தி.மு.கழகம் வலியுறுத்தும்.

கருவுற்றிருக்கும் பெண்களுக்குச் சத்தான உணவு கிடைக்கச் செய்ய, அவர்களுக்கு மகப்பேறு கால உதவியாக ரூபாய் 6 ஆயிரம் வழங்கிடும் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தின் கீழ் இதுவரை 10 இலட்சம் தாய்மார்கள் தமிழகத்தில் பயன்பெற்றுள்ளனர். கருவுற்ற தாய்மார்களுக்குப் பெரிதும் பயனளிக்கும் இந்த மகத்தான திட்டத்தை இந்தியா முழுவதும் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக் கொள்வோம்.

தமிழகத்தில் கழக ஆட்சியில் நடைமுறையில் இருப்பதைப் போல அகில இந்திய அளவில் விண்ணப்பம் செய்யும் விதவையர் அனைவருக்கும் எந்தவித நிபந்தனையுமின்றி உதவித்தொகை மாதந்தோறும் 400 ரூபாய் வழங்க வேண்டுமென்று வலியுறுத்துவோம்.

## அரவாணிகள்

இந்தியாவிலேயே முதன்முதலாகக் கலைஞர் ஆட்சியில்தான் அரவாணிகளுக்கு அங்கீகாரம் அளித்திடும் வகையில், அவர்களுக்குக் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. அவர்களுக்குத் தேவைப்படும் அறுவை சிகிச்சையை இலவசமாக செய்வதற்கும் வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் அரவாணிகள் நலவாரியம் ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த முயற்சிகளின் தொடர்ச்சியாக;

அரவாணிகளுக்கு தேசிய அளவில் உரிய அங்கீகாரம் பெற்றுத் தருவோம்.

## அகில இந்திய அளவில் சுயமரியாதை திருமணச் சட்டம்

திராவிடர் இயக்கம் பல சமூகச் சீர்திருத்தக் கருத்துகளை மக்களிடம் வலியுறுத்தி, பல முற்போக்கான சட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது. சடங்குகளற்ற, மதச்சார்பற்ற, சீர்திருத்த திருமணச் சட்டமான சுயமரியாதை திருமணச் சட்டம் 1968ஆம் ஆண்டிலிருந்து தமிழகத்தில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. பல சமூகவியல் அறிஞர்களும், அரசியல் தலைவர்களும், இந்த முற்போக்கான சட்டத்தை வரவேற்றுள்ளனர். எனவே, அகில அளவில் சுயமரியாதைத் திருமணச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று தி.மு.கழகம் வலியுறுத்தும்.

## விமானப் போக்குவரத்து (Civil Aviation)

திருச்சி, மதுரை, கோவை ஆகிய விமான நிலையங்களைப் பன்னாட்டு விமான நிலையத் தரத்துக்கு உயர்த்தியதைப் போல தூத்துக்குடி விமான நிலையத்தை விரிவுபடுத்தி மேம்படுத்த வேண்டும் என்று மத்திய அரசை தி.மு. கழகம் கேட்டுக் கொள்வதோடு, சேலம், தஞ்சை, வேலூர், இராமநாதபுரம் ஆகிய நகரங்களில் உள்ள சிறு மற்றும் இராணுவ விமான தளங்களை பயணிகள் விமான நிலையங்களாக மாற்றி அமைக்க வேண்டும் என்றும் வலியுறுத்துவோம்.

## சுற்றுச் சூழல் பாதுகாப்பு (Environment Protection)

உலகம் வெப்பமயமாகி வருவதால், ஐ.நா. அமைப்பும், மத்திய அரசும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும், காடுகளை விரிவாக்கிப் பாதுகாக்க வேண்டும் என்றும் வலியுறுத்துகின்றன. இதன் அடிப்படையில் இந்தியாவிலேயே முதல் முறையாக வெப்பமயமாதல் மற்றும் பருவ நிலை மாற்றங்களை ஆய்வு செய்து அரசுக்கு ஆலோசனை வழங்க அண்ணா பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சி மையம் ஒன்றை Centre for Climate Change நிறுவியுள்ளது. பல ஆயிரங்கோடி ரூபாய் மதிப்பில் பல செயல் திட்டங்கள், மத்திய அரசு, மாநில அரசுகளால் நிறைவேற்றப்படுகின்றன. மானிய

உதவியும் அளிக்கப்படுகிறது. இருப்பினும், சுற்றுச்சூழல், காடு பாதுகாப்பு ஆகிய இனங்கள் அரசமைப்புச் சட்டத்தின் பொதுப் பட்டியலில் இணைக்கப்பட்டிருப்பதால், மாநில அரசுகள் எந்தச் சட்டத்தையும் முழுமையாக நிறைவேற்ற முடியாத நிலையில் உள்ளன. அரசமைப்புச் சட்ட 253ஆவது பிரிவின்படி பன்னாட்டு ஒப்பந்தங்களை நிறைவேற்ற, சட்டம் இயற்றும் அதிகாரம் மத்திய அரசிற்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே மாநிலங்கள் சந்திக்கும் இத்தகைய இடர்ப்பாடுகளைக் கவனத்தில் கொண்டு, மாநில அரசுகளின் கருத்துகளைப் பெற்று செயல்திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்த வேண்டும் என்று தி.மு. கழகம் வலியுறுத்தும்.

### சாயம் மற்றும் சலவைத் தொழிற்சாலை கழிவு நீரால் ஏற்படும் சுற்றுச்சூழல் மாசு நீக்கும் திட்டம்

திருப்பூர், ஈரோடு, கரூர், வேலூர் பகுதிகளில் சாயப்பட்டறை, சலவைத் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் கழிவு நீரை, சுத்திகரித்து கடலில் சென்று கலக்கும் வகையில் ஒரு புதிய திட்டத்தினை மத்திய அரசின் உதவியுடன் செயல்படுத்த தி.மு.க. வலியுறுத்தும்.

### பேரிடர் நிவாரணம்

புயல், வெள்ளம் போன்ற பேரிடர் நிகழும்போது பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைத்திட உடனடியாக நிவாரணப் பணிகளையும், மறுவாழ்வுப் பணிகளையும் மேற்கொள்ளத் தேவையான நிதியைப் பெறுவதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்த்திட; மண்டல அளவில் சென்னையில் பேரிடர் நிவாரண ஆணைத்தை (Calamity Relief Commission) உருவாக்கிட மத்திய அரசை வலியுறுத்துவோம்.

### நாடாளுமன்ற நடைமுறை விதிகளில் மாற்றம்

நாடாளுமன்ற நடவடிக்கைகள் நாட்டுமக்களுக்குப் பயன்தரும் வகையில் அமைந்திட வேண்டுமென்று வாக்காளப் பெருமக்கள் எதிர்பார்ப்பது இயல்பான

ஒன்றாகும். நாடாளுமன்ற நடவடிக்கைகளை வேண்டுமென்றே திட்டமிட்டு, திசை திருப்பிடும் வகையில் நாடாளுமன்றத்தின் நேரத்தையும், நோக்கத்தையும், நாட்டுமக்களின் செல்வத்தையும் விரயம் செய்திட மேற்கொள்ளப்படும் முயற்சிகளை— தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் உரிமைகளுக்கு ஊனம் ஏற்பட்டுவிடாமல்— தவிர்த்திடவும், தடுத்து நிறுத்திடவும் அனைத்துக் கட்சிகளுடனும் கலந்து பேசி நாடாளுமன்ற நடைமுறை விதிகளை மாற்றியமைத்திட தக்க முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமென்று வலியுறுத்துவோம்.

இந்த நாடாளுமன்றத் தேர்தலைப் பொறுத்தவரை தேசிய அளவில் மூன்று அணிகள் என்ற நிலை; தமிழகத்தைப் பொறுத்தவரை நான்கு அணிகள். தியாக தீபமும், சொக்கத் தங்கமுமாகிய திருமதி சோனியா காந்தி அவர்களின் தலைமையில் அமைந்துள்ள ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் திராவிட முன்னேற்றக் கழகம் பங்கு பெற்றுள்ளது. ஐக்கிய முற்போக்குக் கூட்டணி, தேசிய ஆட்சி அனுபவமும், நாட்டின் வலிமையையும், வளத்தையும் இரு கண்களெனக் கொண்டு காரியமாற்றிடும் இயல்பும், சாதனைக் கீர்த்தியும் மிக்கது. இந்த அணி சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்ப சாகசம் காட்டும் தந்திரக் கூட்டணி அல்ல. எனவே அளித்த வாக்குறுதிகளை அட்டியின்றி நிறைவேற்றும் வாய்மையும், இந்தியத் திருநாட்டை மேலும் மேலும் சாதனைச் சிகரங்களுக்கு இட்டுச் செல்லும் திடமிகு அணுகுமுறையும் கொண்டு இலங்கும் இந்த ஐக்கிய முற்போக்கு கூட்டணியையே வாக்காளப் பெருமக்கள் இதயபூர்வமாக ஏற்றுக் கொண்டு இணையற்ற வெற்றியினை வாரி வழங்குவார்கள் என்று உறுதியாக நம்புகிறோம்!

மதச்சார்பற்ற நல்லரசு அமைப்போம்!

மதங்களுக்கிடையே நல்லிணக்கம் பேணுவோம்!

சமூகநீதி காப்போம் !

சமத்துவம் வளர்ப்போம்!

ஜனநாயகம் தழைத்திடப் பாடுபடுவோம்!

என்ற முழக்கங்களோடு

## அண்ணா வழியில் அயராது உழைப்போம்!

## ஆதரிப்பீர் உதயசூரியன்!